மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | STC 92/2025 |
| பெயர் | : | முனியாண்டி (PW2/LW7) |
| த/பெ. | : | பேச்சிமுத்து |
| வயது | : | 58 |
| கிராமம் | : | பசுவந்தனை |
| தாலுகா | : | ஓட்டப்பிடாரம் |
| Calling | : | காவல் உதவி ஆய்வாளர் |

(Accused Muthupandi is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13 th day of March 2026.

**முதல் விசாரணை**

1)நான் தற்போது பசுவந்தனை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ காலத்தில் இந்த வழக்கினை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கல்வியரசன் முதல் நிலை காவலர் மற்றும் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர், திரு.ரவீந்திரன் ஆகியோரது கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரீட்சியம் என்பதால் மேற்படியாளர்களுக்காக நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 29.01.2025 ஆம் தேதி பகல் 12.30 மணிக்கு முதல்நிலை காவலர் கல்வியரசன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 சக்கம்மாள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 18/2025 பிரிவுகள் 296(b),131 BNS யின் படி முதல் தகவல் பதிவு செய்துள்ளார். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2) மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் வாக்குமூலத்தையும் கனம் இந்நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும் விசாரணை நகல் ஒன்றை உதவி ஆய்வாளர் திரு.ரவீந்திரன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி உதவி ஆய்வாளர் திரு.ரவீந்திரன் அன்றைய தினமே அவரது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 29.01.2025 ஆம் தேதி காலை மதியம் 13.15 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மந்திரம்

மற்றும் முருகன் ஆசாரி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார்செய்துள்ளார். **(மேற்படி வரைபடம் அ.சா.ஆ.3 ஆகவும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் சக்கமாள், வள்ளியம்மன், பாப்பா என்ற பாப்பாம்மாள், மந்திரம், முருகன் ஆசாரி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல்நிலை காவலர் கல்வியரசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3)சாட்சிகளின் விசாரணையில் இருந்தும் அவரது புலன் விசாரணையில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் 29.01.2025 ஆம் தேதி 15.15 மணிக்கு பசுவந்தனை பஸ்ஸ்டாப்பில் வைத்து ஆஜர் எதிரியை காரணம் கூறி கைது செய்தும் உச்ச நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றியும் நிலைய ஆவணங்களில் பதிவு செய்தும் எதிரி இரு நபர் ஜாமீன் காண்பித்தபடியால் வேண்டும்போது நீதிமன்றத்தில் ஆஜராக அறிவுறுத்தி நிலைய பிணையில் அனுப்பிவைத்துள்ளார். பின்பு 29.01.2025 ஆம் தேதி இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 296(b), 131 BNS வின் பிரகாரம் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் சொன்ன நாள், நேரத்தில், விதத்தில் அ.சா 1 சக்கம்மாள் என்பவர் புகார் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் சொன்ன விதத்தில் முதல்நிலை காவலர் கல்வியரசன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உதவி ஆய்வாளர் ரவீந்திரன் சொன்ன விதத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றும் எதிரியை சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. உதவி ஆய்வாளர் எந்த ஒரு சாட்சியையும் விசாரணை செய்யாமல் இந்த வழக்கில் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கின் சம்பவத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– திரு.S.பாக்கியராஜ்
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.